[1981 ஏப்ரல் 22

ஆற்காடு தாலுக்காவிலுள்ள பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி.

வினா எண். 835 : திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்காவில் பிற்பட்ட வகுப்பினர் மாணவர் விடுதிக்குச் சொந்த கட்டிடம் இல்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) தங்கும் விடுதி கட்டுவதற்கான நடவடிக்கை எப்பொழுது எடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆற்காடு வட்டம் ஆற்காடு நகரில் ஒரே ஒரு விடுதி மட்டும் அரசால் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி விடுதி அரசு கட்டடத்தில் தான் இயங்கி வருகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அரசுக்குச் சொந்தமாக விடுதியில்லாத காரணத்தினால், 10, 12 வயதுள்ள குழந்தைகள் அவல நிலையில், உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, விளக்கு வெளிச்ச வசதியில்லாமல் குடியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? என்பதையும், தாலூகா அளவில், தங்கும் விடுதி எப்போது வருமென்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 355 விடுதிகள் நடந்து வருகிறது. அதிலே 35 விடுதிகள் அரசுக் கட்டிடத்தில் இருக்கின்றன. இந்த 35-ல் ஒன்று, ஆற்காடு— இது அரசு விடுதியில் இருக்கிறது; தனியார் விடுதி அல்ல. ஏதாவது குறைபாடுகள் இருந்தால், என் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால், அந்தக் குறைபாட்டை நீக்க அரசு முயற்சி செய்யும்.

[முற்பகல் 9-30]

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு என்றிருக்கிற விடுதியில் தற்போது கட்டிடம் சரியில்லை என்பது மட்டுமல்லாமல், மாணவர்கள் வசதியற்ற நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே 50 பேர்கள் இருக்கக் கூடிய அளவில் சிறிய இடமாக இருக்கிற காரணத்தினால், எண்ணிக்கையை அதிகப்படுத்துகிற வகையில் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதியின் அளவைப் பொறுத்தும், அங்கே இருக்கக்கூடிய இடவசதியைப் பொறுத்தும், எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்பட முடியும் என்பதைப் பொறுத்தும், இந்தக் கருத்தை குறித்து நாம் இறுதி முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றி விவரக் குறிப்புகள் அனுப்புவார்களானால் துறையினால் ஆராய்ந்து ஆவன செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் எண் 836, 837 மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

தமிழக சிறைக்காவலர் சங்கத்தின் கோரிக்கைகள்.

வினா எண் 838 :- திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக சிறைக்காவலர்கள் சங்கம், காவலர்களுடைய குறைகளை உள்ளடக்கிய மகஜர் ஏதேனும் அரசுக்கு சமீபத்தில் சமர்ப்பித்தது உண்டா ?

(ஆ) ஆம் என்றால் அந்த கோரிக்கைகள் யாவை /

(இ) அந்த கோரிக்கைகள் சம்பந்தமாக அரசு சங்க பிரதிநிதிகளுக்கு கொடுத்த வாக்குறுதி என்ன ?

(ஈ) அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) மொத்தம் 33 கோரிக்கைகளில் உடனடியாக செயல்படுத்துவதற்கு சாத்ய கூறு உள்ள கோரிக்கைகள் பின் வருமாறு :—

1. அவர்களுடைய சங்கத்தை அங்கீகரிப்பது.

2. பிற தென் மாநிலங்களில் இருப்பது போன்று, சாப்பாட்டு நேரங்களில் வேலை செய்யும் காவலர்களுக்கு ஒரு வேளை சாப்பாடு அளிக்க வேண்டும்.

3. எல்லா காவலர்களின் பணியை ஒழுங்குபடுத்த வேண்டும்.

4. பூட்ஸ்க்கு (Boots) பதிலாக ஷூஸ் (Shoes) கொடுக்க வேண்டும்.